நண்பர்களே வணக்கம்

09.04.24 யுகாதி திருநாள் வாழ்த்துகள். வருமான வரி – TDS / 24Q சார்ந்த பதிவு இது. மதிப்பிற்குரிய பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை R.C No.019472/B1/S4/2024 Dt 04.04.2024 பார்த்து இருப்பீர்கள். மொத்தம் 5563 பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு (DDO) வருமான வரித்துறையின் Demand Notice pending. கிட்டத்தட்ட அனைத்து CEO/DEO/HR SEC School /HIGH School list இல் உள்ளது. தங்களின் பள்ளி பெயர் இந்த பட்டியலில் இல்லை எனில் மிகச் சிறப்பு - வாழ்த்துகள். பட்டியல் தங்களின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| DSE-DIST WISE | https://bit.ly/3VQBZPm Excel | https://bit.ly/4aroNFk Pdf |
| DSE-TAN WISE | https://bit.ly/3JcrPRN Excel | https://bit.ly/4cRVmho Pdf |

இந்த பதிவு – மேற்கண்ட Demand Notice pending. ஐ எப்படி சரி செய்வது, என்பதைப் பற்றி அல்ல.

ஏன் வருகிறது மற்றும் 01.04.2024 முதல் எப்படி வராமல் தடுப்பது என்பதைப் பற்றியது. இது முற்றிலும் (DDO) விழிப்புணர்விற்காக எனக்குத் தெரிந்த தகவலை பகிர்கிறேன்.

1) இந்த Demand Notice – pending amount வருவதற்கான காரணம் என்ன?

அ) 24Q/TDS தாக்கல் செய்யாமல் இருப்பது.

ஆ) 24Q /TDS கால தாமதமாக தாக்கல் செய்வது.

இ) உரிய காலாண்டில் முறையாக (சமதவணைகளில்) வருமானவரி பிடித்தம் செய்யாமால் – மொத்தமாக ஜனவரி-பிப்ரவரியில் பிடித்தம் செய்வது.

ஈ) அபராதம்- தண்டனைத் தொகை – மற்றும் அபராத வட்டி.

2) அதென்ன **24Q/TDS** ? என சந்தேகம் எழுவது இயல்பு.

இதற்கு பதில் அறிய…நமது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் வருமான வரி செஸ் தொகை எப்படி நமது வருமான வரி கணக்கில் வரவு செய்யப்படுகிறது என்பதை சற்று விரிவாக பார்க்க வேண்டும்.

தமிழகத்தின் மொத்த வருமான வரி பிடித்தம் தொகை மத்திய அரசு வருமான வரி துறை கணக்கில் Book Adjustment ஒவ்வொரு மாதமும் செய்யப்படுகிறது.

உதாரணத்திற்கு ஏப்ரல்2024 இல் மொத்த பிடித்தம் தொகை 1 கோடி எனில், அது Book Adjustment போது அந்தந்த DTO/PAO கணக்கில் (AIN- Account Identification Number) பிரித்து வரவு செய்யப்படுகிறது. இப்போது வருமானவரி தொகை AIN கணக்கில் இருக்கும்.

ஒவ்வொரு மாவட்ட கருவூல அலுவலரும் மாதம் மாதம் 24G சமர்ப்பிப்பார்கள் AIN கணக்கில் இருக்கும் தொகை DDO-TAN கணக்கில் வரவு செய்யப்படும். (TAN-Tax deduction Account Number)

மாத மாதம் நம் தலைமையாசிரியர் (பணம் பெற்று வழங்கும் அலுவலர்-DDO) TAN கணக்கில் சரியான தொகை வரவு செய்யப்பட்டுள்ளதா? என்பதை நாம் BIN VIEW மூலம் அறிந்து கொள்ளலாம். (BIN- Book Identification Number).

ஒவ்வொரு பணம் பெற்று வழங்கும் அலுவலரும் **மூன்று மாதத்திற்கு** ஒரு முறை கட்டாயம் 24Q/**TDS** சமர்பிக்க வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே TAN இல் உள்ள தொகை தனிநபர் PAN இல் வரவு செய்யப்படும். (PAN- Permanent Account Number)

அதாவது தவறாமல் **மூன்று மாதத்திற்கு** ஒரு முறை DDO 24Q சமர்பித்தால் மட்டுமே, பணியாளர்கள் கட்டிய வருமானவரி தொகை பணியாளர்களின் வருமான வரி கணக்கு எண்ணில் வரவு செய்யப்படும்.

3) பணம் பெற்று வழங்கும் அலுவலர் (**DDO) - 24Q/TDS** எப்போது சமர்பிக்க வேண்டும்?

| Sl.No. | Period | Quarter | Last Date |
|---|---|---|---|
| 1 | April – June | First Quarter – q1 | 31 July |
| 2 | July – September | Second Quarter – q2 | 30 October |
| 3 | October-December | Third Quarter – q3 | 31 January |
| 4 | January- March | Final Quarter – q4 | 31 May |

**4) 24Q/TDS** சமர்பிக்கவில்லை எனில்?

வருமான வரி சட்டத்தின் பிரிவு 234E படி காலதாமதமாக சமர்பிக்கப்படும் **24Q** க்கு நாள் ஒன்றிற்கு ரூபாய் 200 வீதம் பணம் பெற்று வழங்கும் அலுவலருக்கு காலதாமதக் கட்டணம் விதிக்கப்படலாம். பிரிவு 271H இன் படி அபராதம் 10000 ரூபாய். Demand Notice – pending amount வருவதற்கு இது தான் முக்கிய காரணம் . சில பள்ளிகளில் பணம் பெற்று வழங்கும் அலுவலர் ஒவ்வொரு காலாண்டும் **24Q/TDS** தாக்கல் செய்யாமல் மொத்தமாக பிப்ரவரி மாதம் வருமான வரிபிடித்தம் செய்து முடித்தவுடன் q1 to q4 தாக்கல் செய்கிறார்கள், இதனால் அதிக அபராதம் வரலாம்.

**5)** சரி **DDO 24Q/TDS** எங்கு யாருக்கெல்லாம் சமர்பிக்க வேண்டும்?

Auditor office or TIN-facilitation centre (TIN-Tax Information Network) or online through TAN/Traces website. **வருமானவரி கட்டினாலும் கட்டாவிட்டாலும் அனைத்து பணியாளர் விபரங்களையும் சரியான PAN உடன் 24Q இல் சமர்ப்பிக்க வேண்டும்.**

6) **DDO 24Q/TDS** சமர்பிக்க கட்டணம் எவ்வளவு?

TIN-facilitation centre மூலம் பதிவேற்றம் செய்ய ஒரு காலண்டிற்கு கட்டணம் 50 ரூபாய் மட்டுமே அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் எனில் அதிகபட்ச கட்டணம் 100ரூபாய் மட்டுமே. சிலர் அவர்களாகவே online மூலம் கட்டணம் எதுவும் இன்றி தாக்கல் செய்கிறார்கள்.

7) **50 அல்லது 100 ரூபாய் தானா? நாமே எந்த ஒரு கட்டணமும் இல்லாமால் பதிவேற்றம் செய்யலாமா? நாங்கள் இதுவரை 24Q/TDS சமர்பிக்க கட்டணம் ஒவ்வொரு காலாண்டிற்கும் 350 முதல் 600 வரை செலுத்தி வருகிறோமே?**

TIN-facilitation centre மூலம் பதிவேற்றம் செய்ய கட்டணம் குறைவு தான் ஆனால் தகவல்கள் குறிப்பிட்ட வடிவில் இருக்க வேண்டும்.

நாம் அளிக்கும் தகவல்களை process செய்து upload செய்ய இந்தளவு கட்டணம் வசூலிக்கிறார்கள். நாமே சுயமாக Income tax website இல் இருக்கும் free software & e-tutorials பயன்படுத்தி process செய்து pen drive / cd /email மூலம் TIN-facilitation centre க்கு அனுப்பி குறைந்த கட்டணத்தில் பதிவேற்றம் செய்யலாம். அல்லது Online மூலம் நீங்களாகவே கட்டணம் எதுவும் இன்றி பதிவேற்றம் செய்யலாம். (சில அடிப்படை தகவல்கள் தெரிந்து இருக்க வேண்டும்) வருமானவரித் துறை இணையதளத்தில் மற்றும் you tube இல் இது சார்ந்த தகவல்-வீடியோக்கள் உள்ளன.

8) **DDO - 24Q/TDS சமர்பிக்க கட்டணத்தை யார் செலுத்த வேண்டும்?**

இது பணம் பெற்ற வழங்கும் அலுவலரின் கடமை. **இதற்கென அரசு எந்த ஒரு நிதியினையும் தருவதில்லை.** 24Q/**TDS** சரியான நேரத்தில் சமர்பித்தல் அனைவருக்கும் தேவை. எனவே பல பள்ளிகளில் இதை ஒரு கூட்டு பொறுப்புடன் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து கட்டணம் செலுத்துகிறார்கள்.

சில பள்ளிகளில் வருமானவரி செலுத்துபவர்கள் மட்டும் தொகையினை தங்களுக்குள் சமபங்கிட்டு செலுத்திவருகின்றனர்.

**எனது தனிப்பட்ட கருத்து – வருமானவரி செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் பள்ளியில் ஆண்டிற்கு 2.5 இலட்சத்திற்கு மேல் ஊதியம் பெறுபவர்கள் அனைவரும் இணைந்து இந்த தொகையினை செலுத்தலாம்.**

அல்லது ஆர்வமும் விருப்பமும் இருப்பின் - இணையதளம் உதவியுடன் நீங்களாகவே பதிவேற்றம் செய்தல் - Data process செய்து TIN centre மூலம் பதிவேற்றம் எனில் குறைந்த கட்டணம். யாரிடமும் பணம் வசூல் செய்ய வேண்டிய நிலை இல்லை.

9) **நான் முறையாக 24Q/TDS செய்து வருகிறேன் இருப்பினும் சில தடவை சில பணியாளர்களுக்கு வருமான வரி கட்டவில்லை என கடிதம் வருகிறதே அது ஏன்?**

சமர்பித்த 24Q/**TDS** இல் ஏதேனும் சிறு குறைபாடுகள் இருந்திருக்கலாம். சரிசெய்து revised-return தாக்கல் செய்யலாம்.


10) **24Q/TDS** விபரங்களை சரியாக சமர்ப்பிப்பது எவ்வாறு?


இணையதளத்தில் BIN View மூலம் வருமான வரி தொகையை சரிதானா என அறியலாம்…

https://onlineservices.tin.egov-nsdl.com/TIN/JSP/etbaf/ViewBIN.jsp

TAN , AIN eg.(மதுரை மாவட்ட AIN-1009514), Period eg. Jan 2024 to Mar 2024 உள்ளீடு செய்து விபரங்களை பெறலாம்.

அனைத்து மாவட்ட AIN பட்டியல் கடைசி பக்கத்தில் இணைப்பு






நமது அலுவலகத்தில் 2024 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதத்தில் எவ்வளவு தொகை (வருமான வரி மற்றும் செஸ்) என்பதை குறிப்பிட்டு Check box (tick) and click the Verify Amount.

Amount matched – என வந்தால் சரி.

Amount mis matched – என வந்தால் தொகையில் ஏதோ ஒரு தவறு இருக்கிறது.

11) **Amount mis matched –** ஏன் வருகிறது?

நிச்சயமாக மாவட்ட கருவூலத்தில் இருந்து 24G சமர்பிக்கும் போது தவறு நிகழ வாய்ப்பே இல்லை. 10-15 ஆண்டுகளாக வருமான வரி சார்ந்த விடயங்களை பார்த்து வருபவன் என்ற அடிப்படையில் , e-payroll முறை வந்ததில் இருந்து தற்போதைய களஞ்சியம் 2.0 வரையில் DTO- 24G இல் தவறுகளே வருவதில்லை.

அப்படி எனில் தவறுகள் நம் பக்கம் தானா?

ஆம் சில அடிப்படை புரிதல் இருந்தால் தவறுகள் நிகழ வாய்ப்பே இல்லை.

**அ) ஒவ்வொரு மாதமும் ஒன்றாம் தேதி முதல் , கடைசி தேதி வரை நிகழ்ந்துள்ள கருவூல பரிமாற்றங்கள் மட்டுமே அந்த மாத கணக்கில் வரும்.**

உ.ம் - 2024 ஜனவரி மாத சம்பளத்தை ஏதேனும் ஒரு காரணத்தால் பிப்ரவரியில் பெற்றால். வருமான வரியை நாம் பிப்ரவரி2024 இல் தான் சேர்க்க வேண்டும். ஜனவரி மாத சம்பளம் என்பதால் நாம் ஜனவரி2024 இல் சேர்த்து BIN VIEW – பார்த்தால் amount mismatched என தான் வரும்.

ஆ) பொதுவாக சம்பளத்தில் வருமான வரி பிடித்தம் செய்வோம் அதே போல் ஏதேனும் ஒரு பணியாளருக்கு நிலுவைத் தொகை பட்டியல் சமர்ப்பித்து இருந்தால் சில நிகழ்வில் அதற்கும் வருமான வரி பிடித்தம் செய்து இருப்போம். Arrear Bill – I.T Amount சேர்க்காமல் BIN VIEW – பார்த்தால் amount mismatched என தான் வரும்.

இ) ஓய்வு பெற்ற பணியாளருக்கு ஈட்டிய விடுப்பு பட்டியலில் வருமான வரி பிடித்தம் செய்து இருப்போம் அந்த தொகையினை சேர்க்காமல் இருந்தால் amount mismatched என காட்டலாம்.

இவை எல்லாம் சில பொதுவான தவறுகள் .

12) இதை எல்லாம் **Auditor** பார்த்துக் கொள்ள மாட்டாரா?

நிச்சயமாக – பல Auditor – Bin View சரிபார்த்து பின்னர் தான் 24Q /**TDS** சமர்பிப்பார்கள் இந்த நிகழ்வில் தவறே வராது.

சிலர் Bin View சரிபார்க்காமல் நாம் கொடுத்த தகவல்களை அப்படியே பதிவேற்றம் செய்தால் தவறு நிகழ வாய்ப்புள்ளது.

**நாமே Bin View சரிபார்த்து பிறகு Auditor இடம் 24Q/TDS சமர்பிக்க தகவல் அளித்தால் சரியாக இருக்கும். அல்லது நாமே சரியாக பதிவேற்றம் செய்திடல் சிறப்பு.**

13) **Form -16** எல்லோருக்கும் வழங்கவேண்டுமா?

ஒவ்வொரு பணம் பெற்று வழங்கும் (DDO) அலுவலரும், தங்களது பணியாளர்களுக்கு **Form -16** வழங்கவேண்டியது கட்டாயம்.

வருமானவரி சட்டத்தின் படி கையால் வழங்கப்படும் Form -16 செல்லத்தக்கது அல்ல. (DDO) கணினியில் தட்டச்சு செய்து வழங்குவதும் கூடாது. சில நண்பர்கள் வருமான வரிக் கணக்கீட்டுப் படிவங்கள் Income Tax Calculator (Excel Programme) தயார் செய்யும் போது அதில் Form -16 உடன் வருகிறது Printed Form அதில் தலைமையாசிரியர் கையொப்பம் பெற்றுப் பயன்படுத்துகிறார்கள். அதுவும் தவறு தான்.

**முறையாக (DDO) நான்கு காலண்டிற்கும் 24Q/TDS சமர்பித்த பிறகு , அது வருமான வரித்துறையால் சரிபார்க்கப்பட்ட பிறகு TRACES என்ற இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்படும் Form -16 மட்டுமே சட்டப்பூர்வமானது.** வருமான வரித்துறை இணையதளத்தில் **Form -16 -part A & part B** இரண்டும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

14) **Form -16** பெறுவதற்கு கட்டணம் எவ்வளவு?

முற்றிலும் இலவசம். இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்திட கட்டணம் எதுவும் கிடையாது. **TRACES என்ற இணையதளத்தின் வாயிலாக** நீங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

15) **24Q/TDS** சமர்ப்பிக்கும் ஆடிட்டர் அலுவலகத்தில் தனிநபர் Individual ITR/e-filing சேர்த்து தான் செய்யவேண்டும் அதற்கும் ஒவ்வொருவரிடம் தனியாக பணம் வசூலிக்கிறார்?

**24Q/TDS submission and Form 16** வழங்கியயுடன் பணம் பெற்று வழங்கும் அலுவலரின் **கடமை முடிந்து விடுகிறது**. தனிநபர் Individual ITR/e-filing செய்வது தனியரின் பொறுப்பு அதற்கும் DDOவிற்கும் தொடர்பு இல்லை. எனவே அதே ஆடிட்டர் மூலம் தான் தனிநபர் Individual ITR/e-filing செய்ய வேண்டும் எனக் கட்டாயப்படுத்த இயலாது. ஒருவேளை அந்த பணியாளர் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் Individual ITR/e-filing செய்யவில்லை எனில் அதற்கு DDO **பொறுப்பாக மாட்டார்.**

**16) வரியினை சமதவணைகளில் செலுத்தாமல் , நிதி ஆண்டு இறுதியில் ஜனவரி பிப்ரவரியில் மொத்தமாக சிலர் செலுத்துகிறார்களே?**

இது முற்றிலும் தவறு – டிசம்பருக்குள் 75 சதவீத வரியினை செலுத்தி இருக்க வேண்டும். (பார்க்க அட்டவணை) இப்படி ஒரே தவணையில் வரி செலுத்தும் போது வருமானவரி பிரிவு 234C இன் படி அபராத வட்டி வசூலிக்கப்படலாம். இந்த ஆண்டு இதுபோல் ஏற்பட வாய்ப்பு இருக்காது. களஞ்சியம் 2.0 வில் ஏப்ரல்2024 இருந்தே தானாக வருமானவரி பிடித்தம் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. எனவே வருமானவரி செலுத்தும் அனைவரும் முறையாக சமதவணைகளில் செலுத்திட இயலும். பிப்ரவரியில் மொத்த சம்பளத்தையும் வரியாக செலுத்திடும் நிலை மற்றும் சலான் போட்டு வரி செலுத்தும் நிலை தவிர்க்கப்படும், வரிசெலுத்துவோருக்கும் இது நன்மையே பயக்கும்.

| S.N | Deadlines for advance tax | Percentage of Advance tax to be deduct/pay |
|---|---|---|
| 1 | June 15 | 15% |
| 2 | September 15 | 45% |
| 3 | December 15 | 75% |
| 4 | March 15 | 100% |

17) நாமே சுயமாக **24Q/TDS/** individual Income Tax Return (ITR-1) e-filing online இல் செய்வது எப்படி?

எளிய முறை தான், இது சார்ந்து பல youtube வீடியோக்கள் இணையத்தில் உள்ளன.

**selva7pc@gmail.com**

**தகவலுக்காக – க.செல்வக்குமார் தலைமை ஆசிரியர்**

**அரசு மேல்நிலைப் பள்ளி - மோ.சுப்புலாபுரம் – மதுரை மாவட்டம் 625702.**

| S.No | DISTRICT | AIN |
|---|---|---|
| 1 | ARIYALUR | **1009503** |
| 2 | CHENGALPATTU | 1108240 |
| 3 | COIMBATORE | **1009444** |
| 4 | CUDDALORE | 1009610 |
| 5 | DHARMAPURI | **1009562** |
| 6 | DINDIGUL | 1009433 |
| 7 | ERODE | **1009551** |
| 8 | KALLAKURICHI | 1091311 |
| 9 | KANCHIPURAM | **1009595** |
| 10 | KANYAKUMARI | 1009455 |
| 11 | KARUR | **1009573** |
| 12 | KRISHNAGIRI | 1009606 |
| 13 | MADURAI | **1009514** |
| 14 | NAGAPATTINAM | 1009396 |
| 15 | NAMAKKAL | **1009643** |
| 16 | NILGIRIS | 1009411 |
| 17 | PAO (EAST) | **1009746** |
| 18 | PAO (MADURAI) | 1009665 |
| 19 | PAO (NORTH) | **1009735** |
| 20 | PAO (SOUTH) | 1009680 |
| 21 | PERAMBALUR | **1009584** |
| 22 | PUDUKKOTTAI | 1009525 |
| 23 | RAMANATHAPURAM | **1009422** |
| 24 | RANIPET | 1108321 |
| 25 | SALEM | **1009470** |
| 26 | SIVAGANGA | 1009352 |
| 27 | SPAO (CORPN) | **1009713** |
| 28 | TENKASI | 1108660 |
| 29 | THANJAVUR | **1009481** |
| 30 | THENI | 1009363 |
| 31 | TIRUCHIRAPPALLI | **1009492** |
| 32 | TIRUNELVELI | 1009400 |
| 33 | TIRUPATHUR | **1108251** |
| 34 | TIRUPUR | 1009466 |
| 35 | TIRUVALLUR | **1009536** |
| 36 | TIRUVANNAMALAI | 1009632 |
| 37 | TIRUVARUR | **1009621** |
| 38 | TUTICORIN | 1009374 |
| 39 | VELLORE | **1009540** |
| 40 | VILLUPPURAM | 1009385 |
| 41 | VIRUDHUNAGAR | **1010085** |

compiled by
**Selvakumar k** selva7pc@gmail.com
HM
GHSS M SUBBULAPURAM
MADURAI DIST -625702